**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**S.C. 67/2022**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ம் நாள் வியாழக் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW1 Examined as PW1

| | | |
|---|---|---|
| Date | : | 06.02.2025 |
| Name | : | கோபாலகிருஷ்ணன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A4, A6, A7 absennt. Peititon filed and allowed. A1 and 5 present.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது வசித்து இளையமதுக்கூடம் சீர்காழியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு விதை நெல் வாங்குவதற்காக வெளியே போயிருந்தேன். அங்கு பிரச்சனை நடந்துக் கொண்டிருந்தது. என்னிடம் கையெத்துக் கேட்டார்கள் போட்டேன். என்னிடம்காண்பிக்கப்படும் அரிவாள் (2) எனக்கு அடையாளம் தெரியவில்லை. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

கடந்த 24.07.2020 ம் தேதி மதியம் இளையமதுக்கூடம் ஜெயபால் மற்றும் அம்சராஜ் இருவரும் அவர்கள்சொந்த இடத்தில் கிட்டாசி வைத்து மண் அள்ளிக் கொண்டிருந்தார்கள். அதனை பார்வையிட சென்ற ஊராட்சி மன்ற தலைவர் அசோரம், துணைத்தலைவர் ஹரிக்கிருஷ்ணன் மற்றும் பஞ்சாயத்து தலைவர் சென்று பார்த்தோம். கனகசபாபதி மகன் ஜெயபாலிடம் அகோரம் எனது அனுமதி மற்றும் தாசில்தார் அனுமதி இல்லலாமல் எப்படி மண் எடுக்கிறார்கள் என்று கேட்டார். அப்போது ஜெயபால், கேசவன் மகன் அம்சராஜ் என்பவரும் அப்படி தான் எடுப்போம் உங்களால் முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அதன் பின்னர் அகோரம் திருவெண்காடு காவல்துறை மற்றும் தாசில்தாருக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். அப்போது ஜெயபாலுடன் இருந்தவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் ஓடி வரவே ஊராட்சி மன்ற தலைவர் அகோரம் மற்றும் ஹரிகிருஷ்ணன் மற்றும் வந்தவர்களை தாக்க முற்படும் போது நான் இளையமதுக்கூடத்திற்கு நாட்டாண்மை என்பதால் இருதரப்பினரயும் பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி ஊராட்சி மன்ற தலைவரை காரில் அனுப்பி வைத்து ஜெயபாலிடமும், அம்சராஜிடமும் ஊர்கார் என்ற முறையில் பேசி விட்டு எனது இருசக்கர வாகனத்தில்செல்லும் போது ஜெயபாலின் மைத்துனர் நந்தன், தலைமையில் ஜெயபால் மற்றும் கேசவன் மகன் அம்சராஜ், நாங்கூரை சேர்ந்த கோவிந்தராஜ் மகன் இலக்கியராஜ், உக்கரையை சேர்ந்த கனியன், பாண்டியன் மற்றும்சிலரும் ஒன்று சேர்ந்துகொலை செய்யும் நோக்கில் இரும்பு மற்றும் அரிவாளுடன் வந்து தகார வார்த்தைகளால் திட்டி அப்போது நத்தன் என்பவர் எனது அத்தான் ஜெயபாலிடம் ஏன் வம்பு வளக்கிறீங்க என்று கேட்டு இத்தோடு தொலைந்து போடா என்று சொல்லி என் தலையில் வெட்டிய போது நான் விலகவே அந்த வெட்டு எனது இடது பக்க காதில் விழுந்து ரத்த காயம் ஏற்படுத்தியும், அவருடன் வந்த அம்சராஜ் என்பவர் என்னை செத்து போடாஎ ன்று சொல்லி அவர் வைத்திருந்து அரிவாளல் வெட்டவே அந்த வெட்டு எனது இடது பக்க கழுத்திலும் ரத்தகாயம் ஏற்பட்டு அப்போது நான் சத்தம் போடவே அங்கிருந்த ஹரிக்கிருஷ்ணன் மற்றும் ராஜா ஓடிவரவே அவர்கள் அங்கிருந்து சென்ற விட்டார்கள் என்று மேற்படி சம்பவங்களை போலிஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும்

சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றும் நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.